மன்னா

MANNA

பொழிவு 13 | பங்குனி 2000 | குவிப்பு 59

மன்னார் மறைவட்ட வெளியீடு / PUBLISHED BY DIOCESE OF MANNAR

"இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்"

(2 கொரி 6:2)

# திருத்தந்தையின் யூபிலி ஆண்டுத் தவக்காலச் செய்தி – 2000

## ''உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" – (மத் 28:20)

அன்புச் சகோதரங்களே!

1. மனமாற்றத்திற்கும் ஒப்புரவுக்கும் உகந்ததான தவக்காலம் இவ்வாண்டு மாபெரும் யூபிலியினுள் கொண்டாடப்படுகின்றது. இது ஆண்டவனின் கருணையின் ஆண்டு. மனமாற்றத்திற்கும் ஒப்புரவுக்குமான ஒரு ஆன்மீக பயணத்தை எல்லா விசுவாசிகளுக்கும் அது வழங்குகின்றது.அதன் உச்சக்கட்டமே இத்தவக்காலமாகும். அவர்கள் கிறிஸ்து மீதான தமது அர்ப்பணத்தைப் புதுப்பித்து, மீட்பின் மறைபொருளை புத்தாயிர யுகத்தில் புத்தார்வத்துடன் அறிவிக்க இது வழிவகுக்கின்றது. "ஊழி காலமாக மறைந்திருந்த மறை பொருளினுள்" (எபே 3:9) நாம் மேலும் ஆழமாகச் செல்ல, தவக்காலம் உதவி, உயிருள்ள இறைவார்த்தைக்கு முகம்கொடுக்க வழிகாட்டுகிறது. தூய ஆவியின் மீட்கும் வல்லமையை பெறுவதற்காக, எமது சுயநலத்தைக் களைய உந்தித்தள்ளுகின்றது.

2. "குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாய் இருந்தோம்" (எபே 2:5) என, கிறிஸ்து இல்லாத மனிதனின் நிலைமையை புனித பவுல் விபரிக்கின்றார். இதனால்தான், இறைமகன் தன்னை மனித இயல்புடன் இணைத்து, அதை பாவத்தினதும் மரணத்தினதும் அடிமைத்தனத்திலிருந்து மீட்க விரும்பினார்.

இவ்வடிமைத்தனத்தின் ஆழமான வேர்களை மனிதன் நாளாந்தம் தனது உள்ளத்தில் உணர்ந்து அனுபவிக்கின்றான். கடந்த 20ம் நூற்றாண்டில், எண்ணமுடியாத மக்களை சமூகங்களையும் பாதிக்கும் விதத்தில் நடந்த கொடூரமான வன்செயல்கள் போன்ற விபரீதமான நிகழ்வுகளூடாக, சிலவேளைகளில் இம்மனித இயல்பு, தன்னை வெளிக்காட்டுகின்றது. கட்டாய நாடுகடத்தல்கள், திட்டமிட்ட இன ஒழிப்பு, மக்களின் அடிப்படை உரிமைகளை உதாசீனம் செய்தல் ஆகியன, இன்றும் மனித குலத்தையே நாணிக் குனிய வைக்கும் பயங்கர நிகழ்வுகள் ஆகும். நாளாந்த வாழ்விலும், பல்வேறு வடிவங்களிலான ஊழல்கள், பகை உணர்வு, பழிவாங்கல்கள், அடுத்தவர்களை அழித்தல், பொய் பேசுதல் ஆகியவற்றுக்கு மனிதனே காரணகர்த்தாவும், அவற்றுக்கு பலிக்கடாவும் ஆகின்றான். மனித குலமே பாவக்கோலம் பூண்டுள்ளது. இவ் அவலநிலை, "நேர்மையாளரோ இல்லை, ஒருவர் கூட இல்லை" (உரோ 3:10) என்ற அப்போஸ்தலரின் அபாயக்குரலை எமக்கு நினைவூட்டுகின்றது.

3. மனிதன் தன்னை, தனது முயற்சியால் விடுவிக்க இயலாத நிலைக்கும், இந்தப் பாவஇருளுக்கும் எதிராக, கிறிஸ்துவின் மீட்பின் ஒளி பிரகாசிக்கின்றது. தீமையின் அடிமைத்தனத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டு, அதை இறைமக்கள் என்ற அதன் ஆரம்ப உன்னத நிலைக்கு உயர்த்த, பாவத்திற்கு கழுவாயாக நியமிக்கப்பட்டு (உரோ 3:25), மனித வாழ்வில் சிலுவைச் சாவு வரைக்குமே பங்கெடுத்து (பிலி 2:8) உலகின் பாவத்தைச் சுமந்த பலிக்கடா (யோவா 1:29) கிறிஸ்துவே! இந்த பாஸ்கா மறைபொருளுக்குள்ளேயே நாம் புதுப் பிறப்படைந்துள்ளோம். உயிர்ப்புத் திருப்பலித் தொடர்பாடலில் உள்ளபடி

"சாவும் உயிரும் தம்மிடையே,
புரிந்த வியத்தகு போரினிலே
உயிரின் தலைவர் இறந்தாலும்,
உண்மையில் உயிரோடிருக்கின்றார்."

சாத்தானோ முழு மனித குலத்தையும் தாக்கி, மரணத்திற்குள் சிக்கவைத்தான். ஆனால் உயிர்ப்பின் வெற்றியால் அது விடுவிக்கப்பட்டுள்ளது. விசுவாசத்தால் மனுக்குலம் இறைவனுடன் ஒன்றிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. தூய ஆவியின் செயற்பாட்டால், விசுவசிப்போருக்கு இறைஉயிரே முதற்கொடையாக வழங்கப்படுகின்றது.எனவே சிலுவை மீட்பு முழு உலகையுமே புதுப்பித்து, மனிதனை இறைவனுடனும், மக்களை ஒருவர் மற்றவருடனும் ஒப்புரவாக்குகின்றது.

4. தன் திருமகனூடாக மனிதனைத் தேடிவந்த தந்தையின் இரக்கத்திற்கும், கிறிஸ்துவின் பெருங்கொடையாகிய ஒப்புரவுக்கும் எம்மைத் திறந்துவிட அழைக்கும் காலமே யூபிலியாகும். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, எல்லா மக்களுமே, மன்னித்து ஒப்புரவாக்கும் இறையன்பின் வலிமையை அனுபவிக்கும் அரிய காலமாக, இவ்வாண்டு அமைய வேண்டும். இறைவன், தன் இரக்கத்தை, அதை ஏற்க விரும்பும் எவருக்கும், அவரைவிட்டு தொலைவிலுள்ளோருக்கும் ஐயப்பாட்டிலுள்ளோருக்கும் கூட, வழங்குகிறார். தரக்குறைவான வாழ்வாலும், பொய்யான எதிர்பார்ப்புக்களாலும் சலிப்புற்றவர்களுக்கும், வாழ்வின் நிறைவை நோக்கிய பாதையிற் புறப்பட வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. "இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்" (2 கொரி 6:2). "ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள்" (2 கொரி 5:20) என்ற அழைப்பு இவ் வாண்டுத் தவக்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இப்பரிசுத்த ஆண்டில் தனித்தும், சமூகமாகவும், ஒப்புரவாக பல்வேறு வாய்ப்புக்களை திருச்சபை எமக்கு வழங்குகின்றது. இறை ஒளியில் நம் பாவத்தன்மையை புரிந்துகொள்ளவும், ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாய், வாழ்வில் புதுப்பாதை ஒன்றில் புறப்படவும் ஏதுவாக, இறைவனின் சிறப்புப் பிரசன்னத்தை அனுபவிக்க, ஒவ்வொரு மறைவட்டமும் ஒரு சில திருத்தலங்களைக் குறிப்பிட்டுள்ளது. புனித பூமியும் (பலஸ்தீனம்), உரோமையும், மீட்பு வரலாற்றில் சிறப்பிடத்தை வகிப்பதால், இவ்விரண்டு இடங்களும் இறைவனைச் சந்திக்கக் கூடிய சிறப்புத் தலங்களாகும். 2000 ஆண்டுகளுக்கு முன் ஆண்டவர் நடமாடிய இடங்களுக்கு, உள்ளத்தால் ஆன்மீக ரீதியிலாவது, நாம் பயணம் செய்யாதிருக்க எப்படி முடியும்? அங்கே "வாக்கு மனிதரானார்" (யோவா 1:14). "ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழந்து வந்தார்" (லூக் 2:52), "சிற்றூர்களெல்லாம் சுற்றி,... கற்பித்து,... நற்செய்தியைப் பறைசாற்றி,... குணமாக்கினார் " (மத் 9:35). அங்கு தன் பணியை முடித்து, எல்லாம் நிறைவேறிற்று என்று தன் ஆவியைத் தந்தையிடம் ஒப்படைத்த இயேசு (யோவா 19:30), மழலைத் திருச்சபைமேல் தூய ஆவியை ஊற்றினார் (யோவா 20:22).

நானும் யூபிலியைக் கொண்டாடுவதற்காக, எமது விசுவாசம் ஊற்றெடுத்த புனித பூமியை இத்தவக்காலத்தில் தரிசிக்க இருக்கிறேன். இப்பயணத்தின் போது, திருச்சபையின் மக்களுக்காகவும் முழு மனுக்குலத்திற்காகவும் மன்னிப்பையும் ஒப்புரவையும் கோருவேன். அவ்வேளையில் செபத்தினூடாக என்னோடு ஒன்றித்திருக்க, உங்கள் எல்லோரையும் அழைக்கின்றேன்.

5. மனமாற்றத்தின் பாதையானது இறைவனுடன் ஒப்புரவாகவும், கிறிஸ்துவினுள் விசுவாசம், நம்பிக்கை, அன்பு நிறைந்த புதுவாழ்வின் முழுமையைப் பெறவும் எம்மை இட்டுச் செல்கிறது. இம்மூன்றும், மறைபொருளாகிய இறைவனையே நேரிலக்காகக் கொண்டதனால் 'இறை ஆர்வப் பண்புகள்' (Theological virtues) எனப்படும். இப்பண்புகளை வாழந்து, கூடிய அவதானத்தோடும் முழுமையாகவும் இவற்றிற்கு சாட்சியம் பகர, ஒவ்வொரு கிறிஸ்தவனையும் புனித ஆண்டு அழைத்து நிற்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது சொந்த விசுவாசத்தைப் புதுப்பிக்க வேண்டும். விசுவாசம் என்பது கிறிஸ்துவின் மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் நாம் மீட்ப்படைந்து விட்டோம் என்ற, பாஸ்கா மறைபொருளின் அறிக்கையைப் பற்றி பிடித்தலே ஆகும். இறைவன் எம்மை அன்பு செய்கிறார் என்ற உறுதிப்பாட்டில், நாளாந்தம் எம் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்து, அவரின் சித்தத்திற்கு பணிந்து, ஒவ்வொருவரும் "ஆம் " அல்லது "ஆமென்" என்று உள்ளத்தில் பதிலளிப்பதே விசுவாசமாகும்!

யூதர், கிறிஸ்தவர், முஸ்லீம்கள் ஆகியோர் விசுவாசத்தின் ஒரு உன்னத எடுத்துக்காட்டாக ஆபிரகாமைக் கருதுகின்றனர். இறைவனின் வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து, முன்பின் அறியாத வழிகளில் தன்னை அழைக்கும் இறைவனுடைய குரலுக்குப் பணிந்து சென்றார். படைப்பு, மக்கள், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றிலும், முக்கியமாகக் கிறிஸ்துவின் பணியிலும் செய்தியிலும், இறைவனின் அன்புப் பிரசன்னத்தைக் காண்பதற்கு, விசுவாசம் எமக்கு உதவுகிறது. நமக்கும் நாம் காண்பவற்றுக்கப்பாலும் பரந்திருக்கும் இறை பிரசன்னத்தைப் பார்க்கவும்,படைப்பு ஒவ்வொன்றிலும் சொரியப்படும் இறையன்பின் மறைபொருளைக்காணவும், கிறிஸ்து நம்மைத் தூண்டுகின்றார்.

யூபிலியின் அருளால் எமது நம்பிக்கையைப் புதுப்பிக்க ஆண்டவர் எம்மை அழைக்கின்றார். காலமும் கிறிஸ்துவில் மீட்கப்பட்டுள்ளதால், முடிவற்ற மகிழ்ச்சிக்கும், இறைவனுடன் நாம் முழுமையாக ஒன்றுபடவும் வழிதிறக்கப்பட்டுள்ளது. காலம் என்பது வெறுமனே நாட்களைக் கழிப்பதல்ல; மாறாக அது நித்திய திருமண விருந்தை எதிர்ப்பார்திருக்கும் கட்டமாகவும், திருவிருந்தென்பது நாளாந்த முன் சுவையாகவுமே கிறிஸ்தவர்களால் கருதப்படுகின்றது. நித்திய விருந்தை எதிர்நோக்கி, "தூய ஆவியாரும் (திருச்சபையாகிய) மணமகளும் சேர்ந்து வருக! வருக!"(திவெ 22:17) என்கிறார்கள். எல்லாத் தீமைகளுக்கும், ஒவ்வொரு தடைக்கும் அப்பால், நம்மையின் விதை ஒன்று வரலாற்றினுள் புதைந்துள்ளது. காலத்தின் நிறைவில், ஆண்டவர் அதை முளைக்கச் செய்வார் என்ற உண்மைக்கு, நாம் எம் நம்பிக்கையால் சாட்சியம் பகர்கின்றோம். எனவே, நாம் புத்தாயிர யுகத்தை அச்சமின்றி எதிர்கொள்கிறோம். எதிர்காலத்தின் சவால்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும், இறைவனின் வாக்குறுதி தரும் நம்பிக்கையினால் பிறக்கும் திடமனதுடன் முகம் கொடுக்கின்றோம்.

இறுதியாக யூபிலியின் ஊடாக எமது அன்பைப் பற்றியெரியச் செய்யும்படி ஆண்டவர் அழைக்கிறார். காலத்தின் முடிவில் முழு ஒளிமயமாக கிறிஸ்து வெளிப்படுத்த இருக்கும் அதே இறையரசு, இறைச்சித்தத்திற்கு இணங்க மக்கள் வாழுமிடத்தில் இப்போதே மலர்ந்துள்ளது. இறையரசின் சிறப்படையாளங்களான ஒன்றிப்பு, அமைதி, அன்புக்கு சாட்சியம் பகர திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் "செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம்"(யாக 2:17). எனவே எமது அன்பின் மூலம், மனிதனுக்காகக் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட இறை அன்பையும், காலம் முடியும் வரையுமான கிறிஸ்துவின் பிரசன்னத்தையும், நாம் தெரியப்படுத் துகிறோம். கிறிஸ்தவர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில், 'அன்பு' ஒரு வெறும் அடையாளமோ அல்ல. மாறாக அது, தன்னையே வழங்கும் கிறிஸ்துவின் பிரசன்னத்தை தொடரச் செய்வதே ஆகும்.

தவக்காலத்தில் எல்லோரும் செல்வந்தரும் ஏழைகளும் தமது தாராள அன்புப் பணிகளால் கிறிஸ்துவின் அன்பைப் தெரியப்படுத்த அழைக்கப்படுகின்றனர். குறிப்பாக, அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைக்கூடச் சந்திக்க முடியாமல், பசி, வன்செயல், அநீதி ஆகியவற்றால் வேதனைப்படுகின்ற நம் சகோதரர்களுக்கு, கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த, நாம் அழைக்கப்படுகின்றோம். வேதாகமத்தில் காணப்படுவதும், யூபிலி ஆண்டில் எம்முன் நிறுத்தப்படுவதுமான விடுதலை, சகோதரத்துவம் ஆகிய நோக்குகளை சாதனைகள் ஆக்குவதும் இவ்வழியால்தான். பண்டைய யூத யூபிலியில், அடிமைகளை விடுவித்தல், கடன்களை இரத்துச் செய்தல், வறியோருக்கு உதவியளித்தல் ஆகியவை வலியுறுத்தப்பட்டன. இன்றும், பெரும் எண்ணிக்கையான மக்களை, குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில், புதிய வடிவங்களிலான அடிமைத்தனங்களும், மிகக்கொடூரமான வறுமையும் வாட்டி வதைக்கின்றன. வேதனை நிறைந்ததும், நம்பிக்கையற்றதுமான இவ்அவலக்குரலுக்கு, அனைவரும் செவிமடுத்துச் செயற்பட வேண்டும். வறியோரின் தேவைகள் மட்டில் உணர்வற்றிருந்தால், சீரான வாழ்வு வாழத் தேவையானவற்றை எல்லோரும் பெறுவதற்கு நாம் முயற்சிக்காமல் இருந்தால் யூபிலி அருளை நாம் எப்படிக் கோரமுடியும்?

தொடங்கியிருக்கும் புத்தாயிரயுகத்தில், உயிர்வாழ அடிப்படைத் தேவைகள் கூட இல்லாது வேதனைப்படும், எண்ணற்ற எம் சகோதரங்களின் அழுகுரல் கேட்கப்படுவதாக. நன்மைபயக்கும் பதிலை இவர்கள் பெறுவார்களாக. வளங்களின் சமபங்கீட்டை உறுதிப்படுத்தவும், ஒவ்வொரு நபரினதும் முழுமையான மனித முன்னேற்றத்தை முன்னெடுக்கவும், எல்லா மட்டக் கிறிஸ்தவர்களும் நடைமுறைக்கு ஏற்ற செயற்பாடுகளை முன்னெடுப்போராக மாறவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

6. "உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" என்ற இயேசுவின் இவ்வார்த்தைகள் அன்பின் நற்செய்தியை அறிவிப்பதிலும் வாழ்வதிலும் நாம் தனியே இல்லை என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றன. தமது இரக்கம் நிறைந்த அன்புக்கு, உயிரும் வலுவுமுள்ள சாட்சிகளாக எம்மை மாற்ற, கரங்களை விரித்துக்காத்திருக்கும் தந்தையிடம் நாம் திரும்பி வர, இந்த யூபிலி ஆண்டுத் தவக்காலத்தில் இயேசு மீண்டும் எம்மை அழைக்கிறார்.

வேதனைப்படுவோர் எல்லோரினதும், இறை இரக்கத்தினதும் அன்னையாம் மரியாளிடம், எமது கருத்துக்களையும் தீர்மானங்களையும் சமர்ப்பிப்போம். எமது புத்தாயிரயுகப் பயணத்தில், அவளே எமக்கு ஒளிரும் தாரகையாக இருப்பாளாக.

இக்கருத்துக்களுடன், அனைத்தினதும் தொடக்கமும் முடிவுமான மூவொரு கடவுளின் ஆசீரை ஒவ்வொருவருக்கும் இறைஞ்சுகின்றேன். அவருக்கே காலம் முடியும்வரை, கிறிஸ்துவில், ஆசீரும் புகழும் பாடுகின்றோம். இவர் வழியாக, இவரோடு, இவரில், எல்லாம் வல்ல தந்தையே, தூய ஆவியின் ஒன்றிப்பில் எல்லா புகழும் மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே. ஆமென்.

**திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்**

**தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே போற்றி. லூக்.10**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முப்பதுகளின் முடிவு

நாற்பதுக்கும் நமக்கும் என்ன பொருத்தம்?

நாற்பதுகள் நமக்குள் பிரசவிப்பது என்ன?

முடிவில் நமக்குள் ஏற்படும் திருத்தம் என்ன?

- இறைமக்களின் வரலாற்றுப் பாதையிலே நாற்பது நாட்களோ, அல்லது நாற்பது வருடங்களோ திருப்புமுனைகளாக புதிய அத்தியாயமாக மாறியதை நாம் இறைவார்த்தை நூல் வழியாக அறிகின்றோம்.
- நோவாவின் காலத்தில் நாற்பது நாட்களாக பெருவெள்ளம் நீடித்தது. அதன் விளைவு நோவா காப்பாற்றப்பட்டார். புதிய இயற்கைச் சூழல் உருவானது.
- நாற்பது ஆண்டுகள் இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தினூடாகப் பயணம் செய்தனர். முடிவில் விடுதலை வாழ்வு, மகிழ்ச்சி வாழ்வு அவர்களுக்கு கிடைத்தது.
- நாற்பது இரவும், நாற்பது பகலும் இறைவாக்கினர் எலியாஸ் உண்ணா நோன்பிருந்தார். அதன் வழி பணிவாழ்விற்கோர் புதிய உந்துதல்.
- நாற்பது நாட்கள் நினிவே நகர மக்கள் நோன்பிருந்தனர். அதன் முடிவில் மனமாற்றம் நிகழ்ந்தது.
- சீனாய் மலையில் மோயீசன் நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்தார். அது மக்களை வழிநடத்தும் ஆக்க சக்தியாய் மாறியது.
- நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து நாற்பது இரவும் நாற்பது பகலும் உண்ணா நோன்பிருந்தார். முடிவில் மக்களை வாழ்விக்கும் பணியைத் தொடங்கினார்.
- இந்த நாற்பது நாட்கள் அல்லது நாற்பது வருடங்கள் அனுபவம் எப்பொழுதும் ஒரு புதிய விடியலாகவே அமைந்தது.
- நாமும் ஒரு நாற்பது நாட்களை அனுபவித்தோம். தபம், செபம், ஒறுத்தல் என்று விரிந்து சென்ற அந்த நாட்களின் முடிவில் நமது நிலை என்ன? நமது ஆன்மீக வாழ்வோடு இது எவ்வாறு பொருந்தியது? நாற்பது நாட்கள் முடிந்து விட்டது. நொந்து போன உடலை 'மீட்டெடுப்போம் என்ற வருத்தமா? நாம் புதிய வாழ்வை இயேசுவோடு சேர்ந்து ஆரம்பிப்போம் என்ற திருத்தமா? இயேசுவோடு நாமும் நம்முடைய பாவங்களுக்குள் இறந்து புதியவர்களாய் உயிர்த்தெழுவோம். நாம் கடைப்பிடித்த நாற்பது நாட்களும் சிறந்ததொரு திருப்புமுனையாக அமையும் முடிவாக அமையட்டும்.
- அப்பா தந்தையே என்று இறைவனை அழைக்கும் நாம், அனைவரும் எம் சகோதரரே என்ற உணர்வோடு "இறைத்தந்தையின் அன்புறவில்" ஒன்றாகி அன்பிய வாழ்வை பொருளதாக்கி வாழவோம்.

அன்புடன்
ஆசிரியர்.

# அமெரிக்காவில் இருந்து மீண்டும் தனது தாயகம் திரும்பிய வண.பிதா P.யேசுராஜாவுடன் சில மணிநேரங்கள்

**கேட்வர்:** ஐக்கிய அமெக்காவுக்கு எப்போ போனீர்கள்?

வண.பிதா: 29:8.98ல் சென்றேன்.

**கேட்பவர்:** அங்கு போனபோது காலநிலை உங்களுக்கு ஒத்துப் போனதா?

வண.பிதா: Summar காலம். குளிர் தொடங்குவதற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னதாக சென்றிருந்தேன். காலநிலை சாதகமாக அமைந்தது.

**கேட்பவர்:** ஐக்கிய அமெரிக்காவின் எந்த இராச்சியப் பிரிவில் இருந்தீர்கள்?

வண.பிதா: கலிபோர்ணியா மாநிலத்தில்.

**கேட்பவர்:** என்ன படிப்புகள் மேற்கொண்டீர்கள்?

வண.பிதா: ஆன்மீகத் துறையில் பயிற்சி பெற்றேன். சான்கோசே மறைமாவட்டத்திலுள்ள சாந்தா கிளாறா சர்வகலாசாலையில் கற்றேன். கடைசி ஐந்து மாதங்கள் பணி செய்தேன்.

**கேட்பவர்:** இப்படிப்புகள் உங்கள் பணிக்கு உந்துகோலாய் இருக்கின்றனவா?

வண.பிதா: ஏற்கனவே குருத்துவ வாழ்வில் எமது நாட்டில் இருபது வருடம் அனுபவம் கொண்டதினாலும், ஐக்கிய அமெரிக்கருடன் மட்டுமல்லாது ஏனைய நாட்டவர்களுடனும் ஒரு வருட கல்விக் காலத்தில் அனுபவம் பெற்றதன் காரணமாகவும் எனது குருத்துவப் பணி செழிப்புற அமையுமென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

**கேட்பவர்:** வேறு என்ன முயற்சிகள் செய்தீர்கள்?

வண.பிதா: படிக்கும் காலத்தில் ஒரு பங்கில் இருந்துதான் சர்வகலாசாலை சென்று வந்தேன். அங்கு பங்குக் குருக்களுக்கும் உதவி செய்தேன். சர்வகலாசாலையில் கிடைக்கும் ஓய்வுநேரங்களில் குறுகிய Counselling courseலும் பங்கெடுத்துள்ளேன்.

**கேட்பவர்:** அங்கிருந்து கொண்டு தமிழ் மக்கள் எமது நாட்டில் படும் இன்னல்கள் பற்றி என்ன நினைத்தீர்கள்?

வண.பிதா: இலங்கைச் செய்திகள் Internetல் வருவதால் அவற்றை அறியக் கூடியதாய் இருந்தது. அவர்கள் படும் கஷ்டங்களை ஏனைய பிறநாட்டவர்களுடனும் பகிர்ந்து அவர்களுக்கு உண்மை நிலையைத் தெளிவு படுத்தக்கூடியதாய் இருந்தது.

**கேட்பவர்:** அங்கத்திய குருக்கள் துறவியர்களுடன் எப்படி உங்கள் காலம் கடந்தது?

வண.பிதா: எமது நாட்டுக் குருக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பணி செய்வதற்கு அவர்களுக்கு சகல விதமான வசதிகள் இருந்தபோதும், பெரும்பாலானோருடைய ஈடுபாடும், ஆர்வம் குறைவானதாகவே காணப்பட்டது. அமெரிக்காவிலுள்ள மக்களுடைய ஆன்மீக ஈடுபாடு அப்படி உள்ளது. அமெரிக்கரைப் பொறுத்தமட்டில் ஆன்மீகத்துறையில் அவர்களுடைய ஈடுபாடு பாராட்டக்கூடியதாக உள்ளது. மறைமாவட்ட ரீதியில் பங்குத் தளங்களிலும் பொதுநிலையினர் அதிகளவு ஈடுபாடு காட்டி வருவதால் மக்களினுடைய விசுவாச வளர்ச்சி நாளாந்தம் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாய் உள்ளது.

**கேட்பவர்:** அங்கிருந்து கொண்டு உங்கள் மறைவட்டத்தைப் பற்றி என்ன எண்ணினீர்கள்?

வண.பிதா: இங்குள்ள குருக்களுக்கும், மக்களுக்கும் பல வசதிகள் இருக்கின்றபோது, எமது குருக்களும் மக்களும் எத்துணைத் துயர் மத்தியிலும் இறைவிசுவாசத்தில் தளர்ச்சி அடையாது வளர்ச்சி அடைவதை நான் நினைப்பது மட்டுமன்று அங்குள்ள மக்களுடனும் அடிக்கடி பகிர்ந்து கொண்டுள்ளேன்.

**கேட்பவர்:** அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் எமது நாட்டுக் குருக்கள் மட்டில் எத்துணை மனநிலையைக் கொண்டுள்ளனர் எனக் கூறமுடியுமா?

வண.பிதா: அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் பொரும்பாலானோர் குருக்களுடைய தியாகப் பணிகளை மெச்சக் கூடியவர்களாக இருக்கின்றனர். எனவே எமது ஆசியக் கண்டத்துக் குருக்களினுடைய தியாகம் நிறைந்த பணிகளை அவர்கள் வரவேற்கின்ற தனால் எமது நாட்டுக் குருக்கள் மட்டில் அக்கறை காட்டி வருகின்றார்கள்.

**கேட்பவர்:** அமெரிக்காவில் நன்றாக ஒத்துப்போய் இருக்கின்றீர்கள். அங்கு எமது தமிழ் மக்களைச் சந்தித்து என்ன அறிந்தீர்கள்? என்று கூறுங்களேன்.

வண.பிதா: அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் மிகவும் சொற்ப தமிழ் மக்கள் ஆங்காங்கு வாழ்கின்றார்கள். அவர்களுடன் நான் தொடர்பு கொண்ட சந்தர்ப்பங்களில் பெரும்பாலானோர் எமது நாட்டு அவல நிலையை எண்ணி கவலை அடைவார்கள்.

**கேட்பவர்:** அங்கிருந்துகொண்டு வேறு நாடுகள் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததா?

வண.பிதா: ஆம். இரண்டு வார விடுமுறையில் கனடா சென்றேன். தமிழ் மக்கள் பெரும்பாலானோரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சென்ற ஆவணி, புரட்டாசி மாதங்களில் ஜேர்மனி, இத்தாலி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகள், நகரங்களை தரிசித்து எமது மக்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்ததோடு பிரான்ஸில் லூர்த்து அன்னை கெபியையும் தரிசித்தேன்.

**கேட்பவர்:** அங்கு தமிழ் மக்களின் நிலை எப்படி அமைந்துள்ளதெனக் கூற முடியுமா?

வண.பிதா: என்னைப் பொறுத்தமட்டில் எமது மக்கள் நல்ல வசதியுடன் வாழ்கின்றார்கள். அப்படி வாழக் காரணம் அவர்களது கடின உழைப்பு என்றுதான் கூறமுடியும். பலர் இரவு பகல் பாராது ஓய்வின்றி, உறக்கமின்றி பல தொழில்களிலும் ஈடுபடுவதனால் தான் விலைவாசிகள் உயர்ந்த நிலைகளிலும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடியதாய் உள்ளதென்று கூறுவார்கள்.

**கேட்பவர்:** எமது பிள்ளைகளின் நிலைப்பாடுகள் எப்படி இருக்கின்றன?

வண.பிதா: பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்றுக்கொண்டதனால் கல்வியில் பிறநாட்டுப் பிள்ளைகளுடன் சரிசமனாக நிற்கக் கூடியதாய் இருக்கின்றார்கள் என பெற்றோரிடம் இருந்து அறிந்து கொண்டேன். பிள்ளைகளில் பெரும்பாலானோர் தமிழ்மொழியை வீட்டிலோ, பிரத்தியேக கல்வியகங்களிலோ கற்று நன்றாகப் பேசுகின்றார்கள். அதேவேளையில் ஒருசில பிள்ளைகள் தமிழ் மொழியே தெரியாமல் இருப்பது கவலைக்குரிய ஒன்றாகும். அதற்குக் காரணம் அப்பிள்ளைகளின் அக்கறையீனம் என்றுதான் கூறமுடியும்.

**கேட்பவர்:** வெளிநாட்டுச் சூழலில் வளர்கின்ற பிள்ளைகளின் எதிர்காலம் எமது நாட்டுச் சமூகத்திற்கு ஒத்ததாக அமையுமா என்று கூறமுடியுமா?

வண.பிதா: இந்தக் கேள்விதான் பெரும்பாலான பெற்றோருக்கு ஒரு கேள்விக்குறியாக அமைகிறது. காரணம், அமெரிக்க, ஐரோப்பிய கலாச்சாரத்துக்குள் வளர்கின்ற குழந்தைகள் இளைஞர்களாக எமது தாயகம் திரும்பிய பிறகு எமது நாட்டு கலாச்சாரத்துக்குள் வாழமுடியாது போய்விடுமோ என்ற கவலை பெரும்பாலான பெற்றோர் மனதில் இருப்பதை அவர்களிடமிருந்து அறிந்து கொண்டேன்.

**கேட்பவர்:** ஐரோப்பிய நாடுகளைச் சந்தித்துவிட்டு மீண்டும் அமெரிக்கா சென்று என்ன செய்தீர்கள்?

வண.பிதா: மீண்டும் 1999 புரட்டாசி 20ல் அமெரிக்கா சென்று மார்கழி இறுதி வரைக்கும் தாயகம் திரும்பும் வரைக்கும் கலிபோர்ணியாவில் பிறிது ஒரு பங்கில் பணி புரிந்தேன்.

**கேட்பவர்:** உங்கள் தாய்நாடு திரும்பும் காலம் நெருங்கியபோது என்ன நினைத்தீர்கள்?

வண.பிதா: அமெரிக்காவில் அனைத்து வசதிகளுடன் இருந்த போதும் எமது மக்கள் படும் இன்னல்களை அடிக்கடி அறிந்து கொண்டிருந்தமையினால் விரைவாகத் தாயகம் திரும்பி எமது மறைமாவட்டத்தில் எமது மக்களின் கஷ்ட துன்பங்களில் பங்கெடுத்து பணிபுரிய ஆவல் கொண்டிருந்தேன்.

**கேட்பவர் :** சரி, இனிமையான காலைவேளையில் சல்லாபித்தோம். எப்போது தாங்கள் மொழும்புக்கு வந்தீர்கள்?

வண.பிதா: நத்தார் தினம் முடிந்து மார்கழி மாதம் 29ம் திகதி 1999ல் கொழும்பு வந்து சேர்ந்தேன்.

**கேட்பவர்:** உங்கள் பணி சிறக்குமென நினைக்கின்றேன். அப்படித்தானே!

வண.பிதா: ஆம், நிட்சயம்.

**பேட்டி கண்டவர்.**

**அருட்திரு. எஸ். நிக்கலாஸ் ஓ.எம்.ஐ**

## யூபிலி ஆண்டுத் தியானம் தொடங்கி விட்டது மக்கள் உற்சாகத்தோடு பங்கேற்பு

மன்னார் மறைமாவட்ட ஆயரின் ஆலோசனையின் படியும், மேய்ப்புப் பணித்திட்டமிடலின் படியும் பங்குகள் தோறும் நடாத்தப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட யூபிலி ஆண்டுத் தியானம் "மீட்பின் யூபிலி ஆண்டுத் தியானம்" என்னும் மகுடத்தின் கீழ் "இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள்" என்னும் இறைவார்த்தை விருதுவாக்கோடு ஆரம்பமாகிவிட்டது.

இதற்கென தெரிவு செய்யப்பட்ட குருக்கள் இறையன்பு, மனமாற்றம், நற்கருணை என்னும் கருவை மையமாக வைத்து தியானத்தை வழங்கி வருகின்றனர். இவர்கள் நான்கு நாட்கள் ஒரு பங்கில் தங்கியிருந்து காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை சிறப்புக் குழுக்கான தியானத்தையும் (1ம் நாள் ஆண்டு 10 – ஆண்டு 13 வரையுள்ள மாணவர்களுக்கு, 2ம் நாள் இளைஞர் இளம் பெண்களுக்கு, 3ம் நாள் பெற்றோருக்கு) மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணிவரையும் பொதுத் தியானத்தையும் நடாத்தி வருகின்றனர்.

இரண்டு குழுக்களாக தியானத்தை நடாத்தும் குருக்கள் தியானத்தை நன்கு திட்டமிட்டு நடாத்தி வருவது தூய ஆவியானவரின் செயற்பாட்டை ஆழமாக உய்த்துணர வைக்கின்றது என்று பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். முதல் தியானம் தலைமன்னார், பேசாலைப் பங்குகளில் வழங்கப்பட்டபோது பெரும் திரளான மக்கள் ஆன்மீக தாகத்தோடும் பக்தியோடும் பங்குபற்றியதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்தத் தியானம் ஏனைய பங்குகளிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணையில் யேசுவின் பிரசன்னம்

**"உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில்
தெய்வம் பிரசன்னம்.
உயிர் வாழ உள்ளத்தைப் பகிர்ந்து
வாழ்ந்தால் தெய்வம் பிரசன்னம்.
மனிதத்தை மதித்து முழு மனிதனாய்
வளர்ந்தால் தெய்வம் பிரசன்னம்"**

இது நாம் அடிக்கடி தியானிக்கும் பாடல் வரிகள். இவை நிறை வாழ்வைக் கணிப்பிடும் சில அளவைகள்.

### பழைய ஏற்பாட்டில்

பழைய ஏற்பாட்டில் இறைவன் தம் மக்களுடன் உறவு கொள்ள விரும்பினார். அவரின் இறைவெளிபாட்டை அதிசயமான "மன்னா" என்ற உணவின் மூலம் உறவை வளர்த்தார். இதன் மூலம் இஸ்ராயேல் மக்கள் தம் இறைவனின் பிரசன்னத்தை அறிந்து உணர்ந்தார்கள். இஸ்ராயேல் மக்கள் மோயீசன் வழியாக இறைவனின் கட்டளையைப் பெற்று, அதிலும் உடன்படிக்கை பேழையை அமைத்து வணங்கி வந்தார்கள். மற்றும் இஸ்ராயேல் மக்கள் நெருப்புத்தூண் வழியாகவும், மேகத்தூண் வழியாகவும் வழி நடத்தப்பட்டார்கள். இவை அனைத்தும் பழைய எற்பாட்டில் இறைவனின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

### புதிய ஏற்பாட்டில்

புதிய ஏற்பாட்டில் இயேசு மக்களிடம் தொடர்ச்சியாக தம் பிரசன்னத்தை வெளிப்படுத்த விரும்பினார். அதேவேளை தம்மையே மக்களுக்கு கொடுக்கவும் விரும்பினார். இதற்காகவே நற்கருணையை ஏற்படுத்தினார். கடைசி இரா உணவு நிகழ்ச்சியானது இதனை தெளிவாக விளக்குகின்றது. "இது என் உடல், இது என் இரத்தம்" (மத்.26:26-28) "என் தசை மெய்யான உணவு, என் இரத்தம் மெய்யான பானம்" (யோ.6:55) இவை இயேசுவின் உன்னத வாக்குகள். எம் வாழ்வுக்கு இந்த தெய்வீக பிரசன்ன அப்பமாகிய கிறிஸ்துவின் திரு உடலையும் திரு இரத்தத்தையும் தகுதியின்றி உண்டால் இயேசுவின் திருஉடலுக்கு எதிராக பாவங்களைச் செய்கின்றோம் என்று புனித பவுலின் அறிவுரையும் (1 கொரி 11:27) நற்கருணையில் இயேசுவின் மெய்யான நிறைப் பிரசன்னத்தை எடுத்துரைக்கின்றது.

### நற்கருணை பற்றிய புனிதர்களின் கூற்றுக்கள்

நற்கருணையானது நமக்காக பாடுபட்ட அதே கிறிஸ்துவின் உடல் என்கின்றார் புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார். இயேசுவின் பிரசன்னம் பற்றி குறிப்பிடும்போது வாழ்வளிக்கும் நாயகன் கிறிஸ்துவை நற்கருணையில் காண்பதாக கூறுகின்றார் புனித கிறிசோஸ்தம் அருளப்பர். இவை நற்கருணையின் மகா பிரசன்னத்தினை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

### நற்கருணையின் முக்கிய மூன்று கருத்துக்கள்.

நற்கருணையானது மூன்று முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது.

1. ஆண்டவரின் திருவிருந்து
2. ஆண்டரின் தியாகப் பலி
3. ஆண்டவரின் பிரசன்னம், அருட்சாதனம்.

இயேசுவின் பிரசன்னத்தை அவர் விருந்தோடும் பலியோடும் இணைத்துக் காணவேண்டும். அவர் பிரசன்னமாயிருப்பது தம்மை பகிர்ந்து வழங்கும் செயலுக்காகவே. எனவே இயேசுவின் பிரசன்னத்தை நாம் நற்கருணையில் உணர வேண்டும். அவருடன் எம் உறவை வளர்க்க வேண்டும்.

### நற்கருணை ஓர் திருவருட் சாதனம்.

நற்கருணை எல்லாத் திருவருட் சாதனங்களிலும் முதன்மை இடம் பெறுகின்றது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் தொடக்கம் முதல் இறுதிவரை நற்கருணை உறவாடி வருகின்றது. பொதுவாக எல்லாத் திருவருட்சாதனங்களிலும் நற்கருணை பங்கெடுக்கின்றது. நமது அன்றாட வாழ்வின் அருட்சாதனம் நற்கருணை என்றால் மிகையாகாது. நற்கருணை என்றால் இறைமக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக இணைக்கும் திருவருட் சாதனமாகும். இது எம் வாழ்வை வளமாக்கும் அருள் உணவு.

### எமக்கு விடுக்கும் அழைப்பு

நற்கருணை சமூகத்திற்கு ஓர் அழைப்பை விடுக்கின்றது. அதாவது இது ஒரு மாபெரும் விருந்து. தனிமனித விருந்து அல்ல. சமுதாயம் என்ற குடும்பத்தின் விருந்து. உறவை வளர்க்கும் விருந்து. உணர்வை கொடுக்கும் விருந்து. "இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான்." ஏனெனில் இயேசுவின் பிரசன்னத்தால் நாம் புதுப்படைப்பாகின்றோம். புதிய உணர்வுகளை எம்மில் வளர்க்கின்றோம்.

நற்கருணை பிரசன்னத்தின் மூலம் நாம் பல்வேறு வேற்றுமைகளில் இருந்து களையப்படுகின்றோம். ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், படிக்காதவர், என்ற பாகுபாடுகளில் இருந்து விடுபடுகின்றோம். இது எம்மில் ஓர் நிறை உறவை வளர்க்கும் சாதனமாகும். இதனை நாமும் நாளும் ஆராதிக்கின்ற போது இறைப்பிரசன்னத்தால் ஆட்கொள்ளப்படுவோம். நிறைவான இறைபிரசன்னத்தில் எம் வாழ்க்கை பாதைகளை அமைப்போம்.

**அருட்சகோ. நிர்மலராஜ் செ.தா.
ஜெபமாலை மாதா ஆச்சிரமம்
மதகுவைத்த குளம்'
வவுனியா.**

# எது ஒழுக்கம்?

அன்புத் தாயை இகழ்வது ஒழுக்கமா?

ஆசைகள் ஊட்டிய தந்தையை இகழ்வது ஒழுக்கமா?

இறைவனை இகழ்வது ஒழுக்கமா?

ஈகை கொடாமல் இருப்பது ஒழுக்கமா?

உலகத்தோடு ஒட்டி வாழாமல் இருப்பது ஒழுக்கமா?

ஊருடன் நட்புடன் வாழாமல் இருப்பது ஒழுக்கமா?

எல்லோரையும் மதித்துநடக்காமல் இருப்பது ஒழுக்கமா?

ஏணி போல் பிறருக்கு உதவாமல் இருப்பது ஒழுக்கமா?

ஐயங்களை தீர்த்துக் கொள்ளாமல் இருப்பது ஒழுக்கமா?

ஒழுக்கமுடன் நடக்காமல் இருப்பது ஒழுக்கமா?

ஓசையின்றி திருடுவது ஒழுக்கமா?

ஔவை மொழியில் நடக்காமல் இருப்பது ஒழுக்கமா?

வாழ்வில் கல்வி, பணம், பொருள், பலம், அழகு, ஆற்றல் இவை யாவும் நிறைந்திருந்தாலும் ஒழுக்கம் அது இல்லையென்றால் உயர்வில்லை, வாழ்வில் ஒளியில்லை, நிம்மதிக்கு வழியில்லை. வாழ்ந்தும் பலன் இல்லை. எனவே வாழ்வில் இறையோடு இணைந்து ஒழுக்கம் காத்து இன்புற்று வாழ்வுக்கு இறைவார்த்தை ஒளியில் பொருள் தேடி வார்த்தை வழி வாழ்வை அமைக்க முயல்வோமாக.

**சிறுவனே, சிறுமியே,
இளைஞனே, இளைஞியே நில்
யோசி
நீ எவ்வாறு இருக்கின்றாய்?**

**எம். யோண்சி மிராண்டா
வங்காலை**

# ஓர் அனாதையின் அவலம்

சிறுவன் நான்! அனாதையாக இப்பூமியில்! என் அன்னையவள் என்னை தெருவிலே குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டுச் சென்றாள்.

நாம் என்ன பாவம் செய்தோம்!

நீர் செய்த தவறுக்காய் அன்றே எம்மைக் கருவிலே அழித்திருக்கலாம் தானே!

நாம் என்ன பாவம் செய்தோம்!

அனாதை நான் அழகற்றவன் அல்ல. வயிற்றுப் பசியை போக்க இல்லங்கள் சென்று கேட்டால் அடிவயிறே கலங்கிவிடும். இங்கு ஒன்றுமில்லை என பதில் வரும். அழகான பெயர் சூட்டல் வேறு – பிச்சைக்காரன் என்று.

நாம் என்ன பாவம் செய்தோம்!

எம்மை வைத்து உழைப்பார்களே தவிர எம்மை வைத்து அன்பாய் ஆதரிப்பார், அன்பு மொழி பேசி, அரவணைப்பார் யாரும் இல்லை. நான் அனாதை.

உறங்கும்போதும், விழிக்கும் போதும் என் நேசத் தந்தை எனக்கு அன்னையாகவும், தந்தையாகவும், சகோதரனாகவும், நண்பனாகவும் என்னில் உள்ளார். பூமியின் பாரச்சுமைக்காக அன்று தவறு கெட்டு என்னைப் பெற்றாள் என் அன்னை. இன்று நான் அனாதை.

தவறு கெட்டு திரியும் அன்னையரே எம்மை 10 மாதம் சுமந்து பெற்றால் எம்மை தெருவிலே, குப்பைத் தொட்டியிலே எறிந்து விடாதீர்கள். எம்மால் பூமியின் சுமையை தாங்கும் சக்தி எமக்கில்லை. காரணம் அனாதை என்ற பெயர்!

என்றும் ஓர் அனாதையவன்

**ஜீ.அனஸ்மேக் தரம் 3 – இலுப்பைக் குளம்.**

# பாலகர் நாம்

பாலகர் நாம் பாடி வந்தோம்
இறைவன் இல்லம் நாடி வந்தோம்
அருள் தரும் ஆண்டினை காண வந்தோம்
அதிலே ஆசி பெற்றிட வந்தோம்.

பாலகர் நாம் பாதை தெரியாப் பாதகர் – நாம்
இப் பிரபஞ்சத்தின் பூ மஞ்சம் நாம்
இயேசுவின் சின்னஞ் சிறு பிஞ்சுகள் நாம்
பாலகர் என்று நாம் அநீதிக்கு பயந்திடும் அசோதர்கள் அல்ல
நாம் பாகுபாடு பார்த்திடோம்
பண்புடன் பாசறை அமைத்திடுவோம்

இயேவின் சாட்சிகள் நாம் – என்றாலும் சமுதாய பூச்சிகள் அல்ல
பாசத்தை வளர்த்திடுவோம் பகைமையை
என்றும் ஒழித்திடுவோம் நாம்
மன்னிப்பின் மகத்துவத்தை அறிந்திட்ட மைந்தர்கள் நாம்
மண்ணிற்கு என்றும் பாச மலர்களாக
மஞ்சமதில் நாம் வாழ்ந்திடுவோம்.

கட்டளையின் கட்டழகை கண்ணியமாய் கடைப்பிடிப்போம்
கள்ளமில்லா உள்ளத்துடன் இல்லமதில்
காரியங்களை முடித்திடுவோம்
பகிரங்க பகிர்தலை செய்திடுவோம் – அன்பியத்தை
வழி நடத்த ஆதரவு வழங்கிடுவோம்.

பண் பாடிடுவோம் – எம் பாதுகவலராம் பாப்பரசருக்கு
புகழ் பண்பாடிடுவோம் தேடிடுவோம் – நற்பிரசையை
கண்டிடுவோம் எம் வாழ்விலே – சின்ன இயேசுவினை

**க. ஜெயா
ஆத்திக்குளி**

# இறைமகன் எமக்கு அளித்த சிந்தனை துளிகள்

- உன் மீது அன்பு காட்டுவது போல உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக.
- நீங்கள் செபத்தில் எதெதைக் கேட்பீர்களோ அதை எல்லாம் பெற்றுக் கொண்டோம் என விசிவசியுங்கள். உங்களுக்கு கைகூடும்.
- உப்பு நல்லதுதான். ஆனால் உப்பு உவர்ப்பு அற்றுப் போனால் எதைக் கொண்டு அதற்கு சாரம் ஏற்றுவீர்கள்? உங்களுக்குள் உப்பு இருக்கட்டும். ஒருவர் ஒருவர் சமாதானமாய் இருங்கள்.
- நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்த வரும் போது உன் சகோதரனுக்கு உன் மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால் பீடத்தின் முன் காணிக்கையை வைத்துவிட்டு முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின் உன் காணிக்கையை செலுத்து.
- உங்களுக்கு நான் சமாதானத்தை விட்டு செல்கிறேன் என் சமாதானத்தை நீங்கள் ஒருவர் ஒருவரோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
- உங்களுக்குள் யார் சிறியவன் எவனோ அவனே பெரியவன் ஆவான்.
- நீங்கள் தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்.
- இப்போது சிரிப்பவர்களே உங்களுக்கு ஐயோ கேடு ஏனெனில் துயர் உற்று அழுவீர்கள். பணக்காரர்களே உங்களுக்கு ஐயோ கேடு. ஏனெனில் உங்களுக்கு ஆறுதல் கிடைத்து விட்டது.
- கலப்பையை கையில் வைத்த பின் திரும்பிப் பார்ப்பவன் எவனும் கடவுளின் அரசிற்கு தகுதியற்றவன்.
- உன் கண்தான் உனக்கு விளக்கு. உன் கண் தெளிவாக இருந்தால் உடல் முழுவதும் ஒளியோடு விளங்கும். உன் கண் கெட்டிருந்தால் உடல் இருளாய் இருக்கும். உடல் முழுவதும் ஒளியாய் இருந்தால் ஒளியோடு விளங்குவாய்.
- மனிதர் முன் என்னை மறுதலிக்கிறவனோ கடவுளின் தூதர் முன் மறுதலிக்கப்படுவான்.
- நானே வழியும் உண்மையும் உயிரும். என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை.

**அ. சித்திராளன்
அளவக்கை பங்கு.**

# என் கருத்து

ஒருவனுக்கு கூட உதவி செய்ய முடியாத அளவுக்கு அவ்வளவு பரம ஏழையாய் நீ இருக்க முடியாது. ஏன் அப்படி சொல்லுகின்றேன் என்றால், இந்த உலகத்திலே மிகவும் மலிவாக வாங்க முடியும் சரக்கு நல்ல சுபாவம்தான் அன்பை வாங்குங்கள். அது வாங்குபவனுக்கும் கொடுப்பவனுக்கும் ஒன்றுக்கு பன்மடங்கு அதிகமான இலாபத்தை தரக்கூடியது. வெளிப்பார்வைக்கு கேவலமாய் உள்ளதும். ஆனால் உட்புறத்தில் அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசைதான் ஆண்டவன் குடியேறி வசிப்பதற்கு ஏற்ற தொரு மாளிகை. இரக்கம் தயவு அன்போபில்லாத மாளிகை கொடிய காட்டு மிருகங்கள் வாழும் இருண்ட குகை. இதுதான் என் கருத்து.

**இ.மகிழ்வேந்திரன் – முதலைகுத்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பம் ஏன்

"அன்பே கடவுள்" என்றால் ஏன் துன்பம் எம் வாழ்வில் இடம்பெறச் செய்கினறார்?

நடைமுறையில் துன்பத்திற்கும் அன்பிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. "நான் எகிப்திற்கு செய்ததையும், கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி, என்னிடம் வந்து சேரச் செய்ததையும் நீங்கள் கண்டீர்கள்" வி.ப.19:4.

கடவுள் இஸ்ராயேல் மக்களை பல கஸ்ட துன்பங்கள் மத்தியில் பாதுகாப்பாக தம்மிடம் இட்டுச் சென்றதை இங்கு எடுத்துக்காட்டுகிறார். கழுகு மிக உயரமான மரங்களில் உயர்ந்த கொப்புகளில் கூடுகட்டி முட்டையிட்டு அடைகாக்கும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின், குஞ்சுகளின் நன்மைக்காக சில செயல்பாடுகளில் இறங்கும். தனது சொண்டினால் குஞ்சை அரக்கி அரக்கி கூட்டுக்கு வெளியே தள்ளிவிடும். குஞ்சு தத்தளித்து பயப்பட்டு சிறகடிக்கும். உடனே தாய் கீழே பறந்து தன் அகண்ட சிறகுகளை விரித்து குஞ்சைத் தாங்கிக் கொள்ளும். இதன் மூலம் குஞ்சு, பறப்பதற்கும், தன் வாழ்வை பொறுப்பேற்பதற்கும் பயிற்சி கொடுக்கிறது.

இதுவரை அன்போடு வளர்த்த தாய், குஞ்சின் நன்மைக்காகவே இப்படியான துன்பமான பயிற்சியை கொடுக்கின்றது. இதேபோன்று நம் வானகத் தந்தை எம் வாழ்விலும் சில துன்பங்களைத் தந்து அவை வழியாக எம்மை வளர்க்க விரும்புகிறார். எம் மேல் அன்பு இல்லாததன் காரணமாக அல்ல. மாறாக எம் முன்னேற்றத்தில் அக்கறை கொள்வதனாலேயே இவ்விதம் செயல்படுகிறார்.

"நானே இருக்கிறவர்! என்னைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லை...: கொல்பவரும் நானே; உயிரளிப்பவரும் நானே! காயப்படுத்துபவரும் நானே: குனமாக்குபவரும் நானே! இச.32:39

எபிரேயருக்கு எழுதிய திருமுகம் இறைவன் பரிவோடு துன்பங்கள் மூலம் எம்மை வழிநடத்துவதை அழகாக குறிப்பிடுகிறது.

எபி 12 (5) தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்து விடாதீர்கள். "பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் என தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும்போது தளர்ந்து போகாதே".

(6) "தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார். ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்"

(7) திருத்தப்படுவதற்காக துன்பங்களைத் தாங்கிக்கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடாத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளைகள் உண்டோ?

(8) எல்லாப் பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் தண்டனை உங்களுக்கும் அளிக்கப்படாவிட்டால் நீங்கள் உண்மையான பிள்ளைகளாய் இருக்கமாட்டீர்கள்: முறைதவறிப் பிறந்த (வேசிப்) பிள்ளைகளாகவே இருப்பீர்கள்.

(9) இவ்வுலகத் தந்தையர் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள் நாமும் அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து வந்தோம். அவ்வாறாயின் விண்ணகத் தந்தைக்கு நான் எவ்வளவோ பணிந்து வாழவேண்டுமன்றோ?

(10) மேலும் இவ்வுலகத் தந்தையர் தங்களுக்கு நலமெனத் தோன்றின வகையில் சிறிது காலம் நம்மைத் தண்டித்துத் திருத்தினார்கள். ஆனால் கடவுள் தமது நலனுக்காக, நாமும் இவருடைய தூய்மையில் பங்கு கொள்ள வேண்டுமென்பதற்காகவே நம்மைத் தண்டித்துத் திருத்துகிறார்.

(11) இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக் குரியதாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர் இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர்.

ஆகவே யோபு ஆகமம் கூறுவது போல....

"இதோ கடவுள் திருத்தும் மனிதர் பேறுபெற்றோர். ஆகவே வல்லவரின் கண்டிப்பை வெறுக்காதீர். காயப்படுத்தினாலும் கட்டுப் போடுபவர் அவரே! அடித்தாலும் ஆற்றுகின்ற கை அவரதே. யோபு 5:17-18

துன்பங்கள் எம் வாழ்வில் வரும்பொழுது இயல்பாகவே மனமுடைந்து போகின்றோம். ஆயினும் துன்பங்களுக்கும் ஆண்டவருக்கும் தொடர்பு உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. கடும் துன்பங்கள் வரும்பொழுது ஆண்டவர் அவை ஊடாக ஏதோ ஒன்றை எனக்குச் சொல்ல, என்னில் செய்ய விரும்புகிறார் என்ற உணர்வோடு விழிப்புடன் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**"கடவுள் நம்பிக்கைக்குரியவர்"**

1. அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார்.
2. சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார்.
3. அதிலிருந்து விடுபட வழி செய்வார். 1 கொரி 10:13

## சிறுவர்களின் யூபிலி விழா

அளவக்கைப் பங்கிலுள்ள திருப்பாலத்துவ சபையின் யூபிலியானது எமது பங்குத்தந்தை அருட்தந்தை பெனோ அவர்களின் அயராத உழைப்பினால் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இத்தினத்தின் முதல் நாள் 30 திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கான சின்னத்தினை இச்சபையின் இயக்குனரான அருட்தந்தை நோபட் அடிகளார் அவர்களும் அருட்தந்தை நேசன் அடிகளார் அவர்களும் வழங்கி கௌரவித்ததுடன் சிறப்பு திருப்பலி ஒன்றினையும் நிறைவேற்றினார்கள். இந்நிகழ்வு 3:03.00 வெள்ளி அன்று நடைபெற்றது.

அதன் பின்னர் 5.3.00 ஞாயிறு தினத்தன்று சிறுவர்களின் யூபிலி திருப்பலியினை அருட்தந்தை அவிதப்பர் அடிகளாரும், அருட்தந்தை நோபட் அடிகளாரும், அருட்தந்தை பெனோ அடிகளாரும் இணைந்து கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். திருப்பலி முடிவடைந்தவுடன் சிறார்களை மகிழ்விக்கும் முகமாக சிறிய கலை நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. அனைத்து சிறுவர்களும் மிக்க மகிழ்வுடன் இதிலே கலந்து கொண்டனர்.

இவ்வாறு எமது பங்கிலுள்ள சிறுவர்களின் யூபிலியானது மிகவும் சந்தோசமாகவும் நட்புடனும் இறை துணையுடனும் இனிதே நிறைவேறியது.

இவ்வேளையிலே எமது பங்கிலுள்ள சிறுவர்கள் அனைவரும் மன்னாவின் மூலம் அனைத்து சிறுவர்களுக்கும் யூபிலி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வு அடைகிறார்கள்.

**செ. விஜிதா**

**ஆத்திக்குளி**

# மனமாற்றத்தின் காலம்

"எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு" இவை பரிசுத்த விவிலியத்தில் சபை உரையாளர் 3:1-8ல் தெளிவாகக் கூறப்படுகின்றது. காலங்கள் மனிதனை உருவாக்குவதில்லை. மனிதன் காலத்தால் உருப்பெறுகின்றான். காலம் மனிதனுக்கு நிறைவாழ்வின் தத்துவங்களை நிஜப்படுத்த வழிசமைக்கின்றது.

தவக்காலம் என்பது மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். மண்ணுக்கே திரும்பவும் செல்கின்றான் என்பதை எமக்கு நினைவுபடுத்தும் காலம். ஆன்மீக வழியில் செல்லும் மாந்தர்கள் அனைவரும் தந்தையாம் இறைவனின் பிரசன்னத்தை உணரும் காலம். இது மனமாற்றத்துக்கு ஏற்புடைய காலம், அருளின் காலம், இறைவனிடம் திரும்பும் காலம் எனப் பல்வேறு பெயர்களைப் பெறுகின்றது. ஆயினும் தவக்காலம் பாவ வாழ்விலிருந்து புதுவாழ்விற்கு மனமாற அழைக்கும் காலமெனலாம். நாம் அனைவரும் இக்காலத்தில் தான் நிறைவாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம். அதாவது பாவவழியிலிருந்து விடுபட்டு, மனம் வருந்தி, உளமாற்றம் அடைந்து, புது உறவை வளர்க்க எமக்கு ஒரு காலம்.

ஜெபம் தான் இதற்கு ஆணிவேர். தபமே இதற்கு உரமூட்டுகின்ற சாதனம். எனவே எம் வாழ்க்கையில் புதிய சாதனைகளைப் படைக்க சில வேதனைகளை மனமுவந்து ஏற்போம். ஏனெனில் சோதனைகளில் தான் நிறைவாழ்வின் விழுமியங்களை கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உத்தானத்தோடு நிறைவாகப் பங்கெடுக்க முடியும்.

**அருட்சகோ. நிர்மலராஜ் செ.தா.**
**ஜெபமாலை மாதா ஆச்சிரமம்**
**மதகுவைத்த குளம்'**
**வவுனியா.**

# "தவக்கால யூபிலி திருயாத்திரை"
## அளவக்கை பங்கு

அளவக்கைப் பங்கிலுள்ள ஆலயங்களில் ஒன்றான ஆத்திக்குளி ஆலயத்திலுள்ள இளைஞர் மன்ற உறுப்பினர்கள், திருப்பாலத்துவ சபை உறுப்பினர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறையாசிரியர்கள் ஆகியோர் இணைந்து 56 உறுப்பினர் வரையில் எமது தவக்கால யாத்திரையினை 10.03.00 வெள்ளி அன்று மேற்கொண்டோம்.

நாங்கள் முதலில் தோட்டவெளி ஆலயத்திற்கும் அதன் பின்னர் பேசாலை ஆலயத்திற்கும் சென்று பின் தலைமன்னார் ஆலயத்தினை சென்றடைந்தோம். அங்குள்ள பங்குத் தந்தை இயேசுராஜா அடிகளாரும், உதவிப் பங்குத் தந்தை நீக்கிலாஸ் அடிகளாரும் பங்கு மக்களும் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள்.

அதன் பின்னர் சனிக்கிழமை தலைமன்னாரில் இருந்து புறப்பட்டு தாழ்வுபாடு ஆலயத்திற்கும், பட்டித்தோட்டத்திலுள்ள ஆயர் இல்லம், வயோதிபர் இல்லம் போன்றவற்றை தரிசித்து எமது பங்கை வந்து அடைந்தோம்.

இவ்வாறு நாங்கள் சென்ற ஆலயங்களில் எல்லாம் சிலுவைப் பாதை சுற்றி செபமாலை தியானங்கள் செய்து திருப்பலி போன்றவற்றில் பங்கெடுத்ததுடன் தலைமன்னாரிலுள்ள இளைஞர் மன்றம் திருப்பாலத்துவசபை, மறையாசிரியர் போன்றவர்களையும் சந்தித்து எங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் சிறிய கலை நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

இவ்வாறு எமது யாத்திரையானது மிகவும் சந்தோசமாகவும் பக்தியுடனும் முடிவுற்றது. இதற்கு உதவிய சகல ஆலயங்களிலுமுள்ள பங்குத்தந்தையர்களுக்கும் பங்கு மக்களுக்கும் மன்னாவின் மூலம் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்வு அடைகிறோம்.

**செ. விஜிதா.**

**ஆத்திக்குளி**

## அன்பான தாய் உள்ளம்

கல்வாரியில் அன்னை மரியைக் கண்டேன்.
கண்ணீர் சொரியும் தாய் நிலையைக் கண்டேன்

பொன்னான மேனி புண்ணாக நொந்து புழுவாக
துடிக்கும் ஒரு உருவம் கண்டேன்.

அம்மா என்றழைக்க பிள்ளை இல்லாமல் ஓடாகத்
தேயும் தாயைக் கண்டேன்.

## மன்னா பற்றிய உங்களுடைய கருத்துக்கள்

மன்னா பற்றிய உங்களுடைய எண்ணங்களை, கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள், பங்குச்செய்திகள் அனைத்தையும் அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு

**மன்னா**
**அன்பியத் தொடர்பகம்**
**புனித வளன் திருமறைப்பணி நிலையம்**
**மன்னார்.**

தொலைபேசி இலக்கம்: 023-32377

**மன்னா உங்கள் பத்திரிகை, அதன் வளர்ச்சியும் தளர்ச்சியும் உங்கள் கரங்களில்.**

இப்பத்திரிகை மன்னார் மறைவட்ட அன்பிய தொடர்பகத்தால் 50/19 கன்னாரத்தெரு கொழும்பு - 13 லங்கா பப்ளிஸிங் ஹவுஸ் மேற்பார்வையில் அச்சிடப்பட்டது

யூபிலி கி.பி 2000

அன்பியமே நமது வழி தொடருவோம் தொடருவோம் இதி சபை வாழ்க்கைதனை வாழவோம் வாழவோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org